# 06-04-2024 செய்தி

## தைவான் நிலநடுக்கம்:'தைபே 101' தப்பியது எப்படி?

- தைவானில் ஏற்பட்ட 7.4 ரிக்டர் அளவு கொண்ட நிலநடுக்கத்திலும் தலைநகர் தைபேவில் அமைந்துள்ள அந்தத் தீவின் மிக உயரமான 'தைபே 101'கட்டடம் அதிக சேதமில்லாமல் தப்பியுள்ளது.
- இதற்கு அந்தக் கட்டத்தின் நடுவில் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள 'பெண்டுலம்' தான் காரணம் என்று அமெரிக்காவின் 'சிஎன்என் ' ஊடகம் தெரிவித்துள்ளது.
- அந்த வானுயர் கட்டடத்தின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள அந்த பெண்டுலம் 660 மெட்ரிக் டன் எடை கொண்ட இரும்புக் கோளத்தைக் கொண்டுள்ளது.
- நிலநடுக்கம் ஏற்படும்போது ஏற்படும் அசைவுகளுக்கு எதிராக அந்த பெண்டுலம் அசைந்து சுமார் 40 சதவீதம் வரை கட்டடம் குலுங்குவதைக் கட்டுப்படுத்துகிறது.
- இந்த அற்புதமான தொழில்நுட்பத்தினால்தான் அவ்வளவு சக்திவாய்ந்த நிலநடுக்கத்திலும் 'தைபே 101' கட்டடத்துக்கு பெரிய பாதிப்பு ஏற்படவில்லை என்று 'சிஎன்என்' தெரிவித்துள்ளது.



SURESH'